செ.வெ.எண்: 13 நாள்:06.09.2016

# பத்திரிகைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் இராணுவத்தில் பணிபுரிந்த காலத்தில் ஆறு மாதக்காலம் சிறப்பு உடற்பயிற்சி கல்வி **(Basic Course in Physical Education)** முடித்துள்ள முன்னாள் படைவீரர்களுக்கு உடற்பயிற்சி பணிக்கு உதவிடும் வகையில் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின் மூலம் நான்கு மாதக்காலம் சிறப்பு உடற்பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ள முன்னாள் படைவீரர்கள் இராணுவத்தில் 6-மாதக்காலம் சிறப்பு உடற்பயிற்சி கல்வி பெற்றமைக்கான சான்று, அசல் படைவிலகல் சான்று, அடையாள அட்டை, வேலை வாய்ப்பு பதிவட்டை போன்ற சான்றுகளுடன் புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை நேரில் அணுகி விண்ணப்பிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**